கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/23644/2007**
**ஆணையாளர் அவர்களின் 15.11.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.693/2007 பொருள் எண்.70

**ஓய்வூதியம்**

திரு.பி.விஜயரங்கன், மருத்துவ அலுவலர், சுகாதாரதுறை அவர்கள் தன்விருப்ப ஓய்வு அடைந்தமையால் பணியிலிருந்து 30.11.2005 பி.ப. முதல் ஓய்வு பெற்றார். அவர் 22 ஆண்டுகள் 6 மாதங்கள் 23 நாட்கள் தகுதிப் பணி புரிந்தமையால், வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.4547/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,27,802/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.1515/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,01,798/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது தந்தை திரு.எம்.பாலகிருஷ்ணன், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.3638/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக உள்ளாட்சி நிதித்தணிக்கை கணக்குத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

22 வருடங்கள் 06 மாதங்கள் 23 நாட்கள் தகுதிப்பணிக்காலம் புரிந்த இவர் சென்னை மாநகராட்சி 2ம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத் தீர்மானம் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், திரு.பி.விஜயரங்கம், மருத்துவ அலுவலர், சுகாதார துறை, அவர்களுக்கு 01.12.2005 முதல் தன்விருப்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.4547/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,27,802/–ல் தணிக்கைத்தடை காரணமாக 25% பிடித்தம் ரூ.56951/–போக மீதம் ரூ.1,70,851/– வழங்கவும், மேற்படி 25% பிடித்த தொகை தணிக்கைத்தடை நிவர்த்தி செய்தபின் வழங்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.1515/– ஐ (ரூபாய் ஆயிரத்து ஐநூற்று பதினைந்து மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,01,798/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஓராயிரத்து எழுநூற்றி தொண்நூற்றி எட்டு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால், அவரது ஓய்வூதியம் ரூ.4547/–லிருந்து ரூ.3032/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது தந்தை திரு.எம்.பாலகிருஷ்ணன், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.4547/– அன்னாரின் 65 வயது வரை அல்லது இறப்பிற்கு பின் 7 ஆண்டுகள் வரை எது முன்னரோ அது வரை அதன் பின்னர் ரூ.3638/– வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/24691/2007**

**ஆணையாளர் அவர்களின் 18.12.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.694/2007 பொருள் எண்.71

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, மத்திய கணக்கு குழுமம் துறையில் தலைமைக் கணக்கு அலுவலராக பணிபுரிந்து 31.12.2007 பி.ப அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ள திரு.கே.நம்மாள்வார், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடிதம் எண்.4233/எ4/2007, நாள்.17.12.2007ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.01.2008 முதல் மாதம் | ரூ.7650 |
| இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடை | ரூ.3,50,000/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2550/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.5100/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.3.20,076/– |
| ஓய்வூதியரின் காலத்திற்குப் பின்னர் அன்னாரது மனைவி திருமதி. எம்.ஜீவரத்தினம் என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.7650/– 27.12.2014 வரை<br>ரூ.4590/– 28.12.2014 முதல் |

39 ஆண்டுகள் 06 மாதங்கள் 07 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 1) 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிக்கைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ.87,500/– |
| 2) வீடு கட்டும் முன்பணம் வட்டி நிலுவைத் தொகை | ரூ.3,000/– |

மேற்படி தனியரின் இறப்பு மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கை தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கலாம்,

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இப்பொருளின் பத்தி எண்.4ல் “இரண்டாம் வகுப்பு அலுவலர்” என்று குறிப்பிடப்பட்டுள்ளதை “வகுப்பு 1 (ஏ) அலுவலர்” என்ற திருத்தத்துடன் இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி2/23368/2007

ஆணையாளர் அவர்களின் 18.12.2007 நாளிட்ட குறிப்பு

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.695/2007 பொருள் எண்.72

**ஓய்வூதியம்**

திரு.எஸ்.இளங்கோவன், செயற்பொறியாளர் (முதன்மை பொறியாளரின் நேர்முக உதவியாளர்) பணித்துறை அவர்கள் தன்விருப்ப ஓய்வு காரணமாக பணியிலிருந்து 01.06.1999 மு.ப. முதல் ஓய்வு பெற்றார். தனியர் 34 வருடங்கள் 10 மாதங்கள் 11 நாட்கள் தகுதிப் பணி புரிந்தமையால், சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.பி2/43891/99, நாள்.08.10.1999ன்படி தற்காலிக ஓய்வூதியமாக ரூ.4238/– மற்றும் தற்காலிக பணிக்கொடைத் தொகை ரூ.1,84,586/– மற்றும் தொகுப்புத் தொகை ரூ.2,19,266/– வழங்கப்பட்டுள்ளது. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, நி.மு.எண்.1838/எ4/2007, நாள்.27.09.2007 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| தன்விருப்ப ஓய்வூதியம் 01.06.1999 முதல் மாதம் | ரூ.5813/– |
| பணிக்கொடை | ரூ.2,53,193/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2325/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.3488/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.3,00,762/– |
| குடும்ப ஓய்வூதியம் (மனைவி திருமதி. இ.நாச்சியார்) | ரூ.5813/–(65 வயது அல்லது மறைவுக்கு பின் ஏழு ஆண்டுகள் எது முன்னரோ அது வரை) பின்னர் ரூ.3488/– |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.எஸ்.இளங்கோவன், 01.06.1999 மு.ப. முதல் தன்விருப்ப ஓய்வு பெற்ற செயற்பொறியாளர் (முதன்மை பொறியாளரின் நேர்முக உதவியாளர்) பணித்துறை அவர்களுக்கு, தணிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்களாக தன்விருப்ப ஓய்வூதியமாக ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியமான ரூ.4238/–லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் ரூ.5813/–ஆக வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,53,193/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி மூவாயிரத்து நூற்று தொன்னூற்று மூன்று மட்டும்) ஏற்கனவே வழங்கப்பட்ட பணிக்கொடை ரூ.1,84,586/– மற்றும் தணிக்கை தடைகள் காரணமாக பிடித்தம் செய்ய வேண்டிய 25 விழுக்காடு தொகை ரூ.63,298/– (ரூபாய் அறுபத்தி மூவாயிரத்து இருநூற்று தொன்னூற்று எட்டு மட்டும்) ஆக மொத்தம் ரூ.2,47,884/– (ரூ.1,84,586/– + ரூ.63,298/–) நேர் செய்து மீதத் தொகை ரூ.5309/– (ரூபாய் ஐந்தாயிரத்து முன்னூற்று ஒன்பது மட்டும்) வழங்கவும், மற்றும் அனுமதிக்கப்படும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2325/–ஐ தொகுத்துப்பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,762/– (ரூபாய் மூன்று லட்சத்து ஏழுநூற்று அறுபத்தி இரண்டு மட்டும்) ஏற்கனவே வழங்கப்பட்ட தொகுப்புத் தொகை ரூ.2,19,266/– சரிசெய்து மீதத் தொகை ரூ.81,496/– (ரூபாய் எண்பத்தி ஓராயிரத்து நானூற்று தொன்னூற்று ஆறு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.5813/–லிருந்து ரூ.3488/– ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.இ.நாச்சியார் அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.5813/– ஓய்வூதியரது 65 வயது அல்லது மறைவுக்குபின் ஏழு ஆண்டுகள் இதில் எது முன்னரோ அதுவரையிலும், பின்னர் ரூ.3488/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ3.ந.க.எண்.சி1/230/2006
ஆணையாளர் அவர்களின் 19.11.2007 நாளிட்ட குறிப்பு

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.696/2007 பொருள் எண்.73

## குடும்ப ஓய்வூதியம் விதி தளர்வு

சென்னை மாநகராட்சி, துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை சான்றில் 29.09.1996 அன்று காலமான திரு.வி.பிரசாத், கிளினர், கோட்டம்–37, பகுதி–7, மண்டலம்–3, என்பவர் 10 ஆண்டுகள் 97 நாட்கள் தகுதி பெறு பணிக்காலமாக பணிபுரிந்துள்ளார் என்றும், இந்த தகுதி உள்ள பணிக்காலத்திற்குரிய குடும்ப ஓய்வூதியம் திருமதி.ஆதிலட்சுமி, மறைந்த பணியாளரின் மனைவிக்கு இறக்கும் காலம் வரை (அ) மறுமணம் புரியும் வரை வழங்க தணிக்கை சான்று அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் சென்னை நகர உரிமையியல் நீதிமன்ற உத்தரவு ஓ.எஸ்.எண்.2695/2001ன்படி மார்ச் 2004 வரை ஓய்வூதிய நிலுவையில் மறைந்த பணியாளரின் தாயார் திருமதி.கே.பி.சின்னம்மா, என்பவருக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இது ஓய்வூதிய விதிகளுக்கு முரணாக உள்ளதால் இவ்வினத்திற்கு அரசுக் கடித எண்.38669/ ஓய்வூதியம் 93–1 நாள்.25.06.1993 தளர்த்தி தளர்வாணை பெறப்பட வேண்டும் என தணிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு கடித எண்.38669/ ஓய்வூதியம்/93–1 நிதி(ஓய்வூதியம்) துறை, நாள்.25.06.1993ன் விபரம் கீழே கண்டுள்ளவாறு அளிக்கப்படுகிறது.

“ At present in respect of Court Orders which do not confirm to Pension Rules, such cases will have to be referred to the concend Administative departments of Secretariat and necessary orders have to be issued in relaxation of relevant rules for authorising payment of Family Pension/ D.C.R.G and hence requested to send pension proporals along with relaxation orders obtained from the concerned administative department of Secretariat in such cases.”

எனவே, திரு.பி.பிரசாத், கிளினர், கோட்டம்–37, பகுதி–7, மண்டலம்–3, என்பவர் 29.09.1996 அன்று காலமானவரின் தாயார் திருமதி.கே.பி.சின்னம்மா என்பவருக்கு சென்னை நகர உரிமையியல் நீதிமன்ற உத்தரவின்படி மார்ச் 2004 வரை ஓய்வூதிய நிலுவையில் 50 சதவீதத்தை வழங்க அரசுக்கு கடிதத்தில் தெரிவித்துள்ள ஓய்வூதிய விதிகளுக்கு முரணாக உள்ளதற்கு இவர் பொருட்டு தளர்வாணை பெற அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/0212/2007
## ஆணையாளர் அவர்களின் 11.12.2007 நாளிட்ட குறிப்பு

## 29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.697/2007 பொருள் எண்.74

### பணியமைப்பு–தேர்வு நிலை ஊதியம் வழங்க அனுமதி

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. சி.பேபி ரமோனா, பத்தாண்டு கால பணியை முடித்துள்ளார். அவருக்கு தேர்வுநிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர்.திருமதி.சி.பேபி ரமோனா, மருத்துவ அலுவலராக தற்காலிகமாக 15.09.1996 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது தற்காலிக நியமனம் அரசாணை எண்.474, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந3) நாள்: 26.09.2001ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தனியர் 06.11.1998 முதல் தகுதிக்காண் பருவம் பூர்த்தி செய்தவராக மன்ற தீர்மான எண்.372/2006ன்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகை திட்டம் அவர்கள் டாக்டர். திருமதி. சி.பேபிரமோனா, மருத்துவ அலுவலர் 15.09.2006 முதல் தேர்வு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ.11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளம் ரூ.9100–275–14050ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

டாக்டர். திருமதி. சி.பேபி ரமோனா, மருத்துவ அலுவலர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் 01 | மருத்துவ அலுவலரின் பெயர் 02 | முதன்முதலில் நியமன நாள்/ பணிவரன்முறை செய்த நாள் 03 | தகுதிக்காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் 04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் 05 | பத்தாண்டு பணியை முடித்த நாள் 06 |
|---|---|---|---|---|---|
| 01) | டாக்டர். திருமதி. சி.பேபி ரமோனா, | 15.09.1996 | 06.11.1998 | 53 days with MC | 14.09.06 |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் 07 | தண்டனை முற்றுப் பெற்ற நாள் 08 | தேர்வுநிலை ஊதியம் பெற தகுதியுடையவரா 09 | தேர்வுநிலை வழங்கப்பட வேண்டிய நாள் 10 |
|---|---|---|---|
| ஏதுமில்லை | – | ஆம் | 15.09.2006 |

டாக்டர். திருமதி. சி.பேபி ரமோனா, மருத்துவ அலுவலருக்கு தேர்வுநிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. சி.பேபி ரமோனா, மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டு பணியை 14.09.2006 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 15.09.2006 முதல் அடிப்படை சம்பளம் ரூ.11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளமாக ரூ.9100–275–14050ல் நிர்ணயிக்க நியமனக்குழு முலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.698/2007 பொருள் எண்.75

**பணியமைப்பு–தேர்வு நிலை ஊதியம் வழங்க அனுமதி**

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. பி.மைதிலி, மருத்துவ அலுவலர் அவர்கள் பத்தாண்டு கால பணியை முடித்துள்ளார். அவருக்கு தேர்வுநிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. பி.மைதிலி, மருத்துவ அலுவலராக 02.02.1996 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.74, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந3) நாள்: 26.09.2001ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தனியர் 20.02.1998 முதல் தகுதிக்காண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகை திட்டம் அவர்கள் டாக்டர். திருமதி. பி.மைதிலி, மருத்துவ அலுவலர் 02.02.2006 முதல் தேர்வு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ.11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளம் ரூ.9100–275–14050ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

டாக்டர். திருமதி. பி.மைதிலி, மருத்துவ அலுவலர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் 01 | மருத்துவ அலுவலரின் பெயர் 02 | முதன்முதலில் நியமன நாள்/ பணிவரன்முறை செய்த நாள் 03 | தகுதிக்காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் 04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் 05 | பத்தாண்டு பணியை முடித்த நாள் 06 |
|---|---|---|---|---|---|
| 01) | டாக்டர். திருமதி. பி.மைதிலி, மருத்துவ அலுவலர் | 02.02.1996 | 20.02.1998 | 08.05.06 முதல் 19.05.96 12 நாள் 28.04.97 முதல் 05.05.97 8 நாள் | 01.02.06 |

| பிந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் 07 | தண்டனை முற்றுப் பெற்ற நாள் 08 | தேர்வுநிலை ஊதியம் பெற தகுதியுடையவரா 09 | தேர்வுநிலை வழங்கப்பட வேண்டிய நாள் 10 |
|---|---|---|---|
| ஏதுமில்லை | – | ஆம் | 02.02.2006 |

டாக்டர். திருமதி. பி.மைதிலி, மருத்துவ அலுவலருக்கு தேர்வுநிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. பி.மைதிலி, மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டு பணியை 01.02.2006 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 02.02.2006 முதல் அடிப்படை சம்பளம் ரூ.11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளமாக ரூ.9100–275–14050ல் நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு முலமாக வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.6.ந.க.எண்.சுது/எச்1/1236/2007**

**ஆணையாளர் அவர்களின் 13.12.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.699/2007 பொருள் எண்.76

**பணியமைப்பு – தேர்வு நிலை ஊதியம் வழங்க அனுமதி**

டாக்டர் திருமதி. இ. சரஸ்வதி, என்பவர் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.சி1/13003/94, நாள்:31.03.1995 ன்படி மருத்துவ அலுவலராக 19.04.1995 முதல் சென்னை மாநகராட்சிப் பணியில் சேர்ந்தார். அதனை தொடர்ந்து 23.06.2006 முதல் உதவி சுகாதார அலுவலராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இதன் தொடர்பாக தெரிவிக்கப்படுவது என்னவெனில், அன்னாரது பணி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/13003/94, நாள் : 13.09.1999 ன்படி 19.04.1995 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. பிறகு 21.09.1997 முதல் அன்னார் தகுதிகாண் பருவம் முடித்தவராக அங்கீகரிக்கப்பட்டும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மருத்துவர் திருமதி. இ. சரஸ்வதி, மருத்துவ அலுவலர் பதவியில் பத்தாண்டுக் கால பணி முடித்துள்ளமைக்கு 19.04.2005 அன்று தேர்வு நிலை வழங்க வேண்டியுள்ளது. ஆனால், அன்னார் பத்தாண்டுகளில் 28 நாட்கள் மட்டும் சம்பளமில்லா விடுப்பு துாய்த்துள்ளதால், 17.05.2005 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் திருமதி. இ. சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர், அவர்கள் பட்டயப்படிப்பு (D.P.H.) பயில சென்ற காலம் 23.06.1998 முதல் 14.04.2000 வரை, அரசாணை எண்.31, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்: 24.02.2005ன்படி மற்றும் மன்ற தீர்மான எண்.144/2005, நாள்: 18.05.2005ன்படி பணிக்காலமாக கருதப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திருமதி. இ. சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–6 அவர்கள் முன்பு வகித்த மருத்துவ அலுவலர், பதவியில் பத்தாண்டு கால பணியை முடித்துள்ளமைக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை அனுமதிக்கப்பட வேண்டும். இவர் 10 ஆண்டு கால பணி முடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | மருத்துவ அலுவலர் பதவியில் பணி நியமனமான நாள் | தகுதிகாண் பருவம் பூர்த்தியான நாள் | சம்பளமில்லா விடுப்பு துய்த்த விவரம் |
|---|---|---|---|---|
| 01. | திருமதி. இ. சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர், | 19.04.1995 | 21.09.1997 | 28 நாட்கள் |

| 10 ஆண்டுகால பணி முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தண்டனை முடிவுற்றதா | மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 16.05.2005 | ஏதும் இல்லை | -- | 17.05.2005 |

கணக்கு அலுவலர்/மண்டலம்–6 அவர்களின் 04.12.2007 நாளிட்ட குறிப்புரையில், மருத்துவர் திருமதி. திருமதி. இ. சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–6 அவர்களுக்கு முன்பு வகித்த பதவியான மருத்துவ அலுவலர் பதவியில் 17.05.2005 முதல் தேர்வு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.9100–275 –14050ல் 17.05.2005 முதல் ரூ.11,025/– நிர்ணயம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

மருத்துவர் திருமதி. இ. சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லையென்றும்,

தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு தேர்வு நிலை அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் : 03.09.1982 ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, திருமதி. இ. சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 அவர்களுக்கு, முன்பு வகித்த பதவியான மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டுகள் பணி முடித்தமைக்கு, 17.05.2005 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.9100–275 –14050 இல் 17.05.2005 முதல் ரூ.11,025/–ல் நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக் குழு மூலமாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.இ1/2379/2006**
**ஆணையாளர் அவர்களின் 26.11.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.700/2007 பொருள் எண்.77

**தேர்வுநிலை ஊதியம் அனுமதித்தது – பின்னேற்பு**

திரு.கே.கேசவன், அவர்கள் சென்னை மாநகராட்சியில் பொதுத்துறை குறிப்பாணை பொ.து.ந.க.எண்.ஏ3/61669/78–11, நாள்.08.12.1978ன்படி உதவி போர்மெனாக பணி நியமனம் செய்யப்பட்டு 20.12.1978 அன்று இயந்திர பொறியியல் துறையில் பணியில் சேர்ந்துள்ளார். இப்பதவி உதவிபொறியாளர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தனியர் பணியில் சேர்ந்த நாள்.20.12.1978 முதல் பணிவரன் முறை செய்தும், 01.01.1981 முதல் தகுதிகாண் பருவம் அங்கீகரித்தும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியர் உதவி பொறியாளர் பதவியில் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணியாற்றியதின் அடிப்படையில் 20.12.88 முதல் உதவி பொறியாளர் பதவியில் தேர்வு நிலை ஊதிய விகிதத்தில் புக அனுமதித்து ரூ.1340–75–1715–90–2435 எனும் ஊதிய விகிதத்தில் ரூ.1565+ 35 த.ஊ என ஊதியம் நிர்ணம் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற தீர்பிற்குட்பட்டும், அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும் திரு.கே.கேசவன், உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு ஆணையரின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/838–1/90 நாள்.05.06.1991ல் ஆணையிடப்பட்டது. தனியர் 07.06.91 அன்று பணியில் சேர்ந்துள்ளார். இப்பதவியில் திருத்திய ஊதிய விகிதமான ரூ.2200–75–2800–100–4000ல் இயந்திர பொறியியல் துறையின் குறிப்பாணை இ.பொ.து.ந.க.எண்.எம்.4/1292/95, நாள்.26.04.1995ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியர் உதவி செயற் பொறியாளர் பதவியில் பத்தாண்டுகள் பூர்த்தி செய்வதற்குள் செயற்பொறியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு ஆணையரின் செயல் முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/36102/98, நாள்.29.08.2000ல் ஆணை வழங்கப்பட்டு தனியர் 31.08.2000 அன்று பணியில் சேர்ந்துள்ளார்.

ஆணையரின் 17.08.2002 நாளிட்ட செயல்முறை ஆணையில் திரு.கே.கேசவன், செயற்பொறியாளரின் பணி உதவி செயற் பொறியாளர் பதவியில் 07.06.1991 முதல் பணி நியமனம் உறுதியாக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தனியர் அளித்த விண்ணபத்தில் அரசாணை எண்.210, பணியாளர் மற்றும் சீர்திருத்தத்துறை நாள்.11.03.1987ல் தெரிவித்துள்ள கருத்துருபடி உதவி செயற் பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்ய கோரியிருந்தார்.

கீழ்நிலை பதவியின் தேர்வுநிலை ஊதிய விகிதமும், உயர் பதவியின் சாதாரண நிலை ஊதிய விகிதமும் சமமாக இருப்பின், கீழ்நிலை பதவியின் தேர்வு நிலை காலத்தை உயர் பதவியில் தேர்வுநிலை ஊதியம் கணக்கிட எடுத்துக் கொள்ளலாம் என அரசாணை நிலை எண்.210 ப.ம.சீ.துறை. நாள்.11.03.87ல் தெரிவித்துள்ளவாறு உதவி பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதமான ரூ.8000–275–13500ல் ஊதியம் நிர்ணம் செய்யப்பட்ட நாள்.20.12.1988 முதல் பத்தாண்டுகள் கணக்கிட்டு உதவி செயற்பொறியாளர் பதவியில் 20.12.1998 முதல் தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ல் புக அனுமதித்து ரூ.10475/– அடிப்படை ஊதியம் நிர்ணயம் செய்யலாம் எனவும் அடுத்த ஊதிய உயர்வு 01.10.99 அன்று வழங்கலாம் எனவும் 08.01.2007 நாளிட்ட கணக்கு அலுவலரின் (க) குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

தனியர் வகிக்கும் பதவி சென்னை மாநகராட்சி பொறியாளர் பணிப்பிரிவில் வகுப்பு–2ன் கீழ் வருவதால், தனியருக்கு உதவி செயற் பொறியாளர் பதவியில் தேர்வு நிலை ஊதியம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி பெற வேண்டும். மன்றத்தின் அனுமதி பெற்று, ஊதிய நிர்ணயம் செய்ய கால தாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு தனியருக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஆணையரின் அதிகார பங்களிப்பின்படி துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் ஆணை பெற்று ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டது. துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் செயல்முறை ஆணை க.து.ந.க.எண்.இ1/2379/2006, நாள்.14.02.2007ல் ஆணை வழங்கப்பட்டது.

எனவே, கட்டடத்துறையில் பணியாற்றி தற்போது மண்டல அலுவலகம்–2ல் பணியாற்றி வரும் திரு.கே.கேசவன், செயற்பொறியாளர், அவர்களை மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, உதவி செயற் பொறியாளர் பதவியின் தேர்வுநிலை ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ல் 20.12.1998 முதல் புக அனுமதித்து ரூ.10475/– என உதவி செயற் பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டதற்கு, நியமனக்குழு மூலமாக மனறத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.6.ந.க.எண்.சுது/எச்1/637/2007

ஆணையாளர் அவர்களின் 04.12.2007 நாளிட்ட குறிப்பு

## 29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.701/2007 பொருள் எண்.78

### பணியமைப்பு – சிறப்பு நிலை அனுமதி

மருத்துவர் திருமதி. மனோன்மணி ஜோஸ்பின், என்பவர் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.சி1/2872/82, நாள் : 04.08.1984ன் படி மருத்துவ அலுவலராக 18.08.1984 முதல் சென்னை மாநகராட்சிப் பணியில் சேர்ந்தார்.

இதன் தொடர்பாக தெரிவிக்கப்படுவது என்னவெனில், அன்னாரது பணி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி6/14517/87, நாள்: 05.03.1988ன் படி உறுதியாக்கம் செய்யப்பட்டும், 19.08.1986 முதல் அன்னார் தகுதிகாண் பருவம் முடித்தவராக அங்கீகரிக்கப்பட்டும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மருத்துவர் திருமதி. மனோன்மணி ஜோஸ்பின், மருத்துவ அலுவலர் பதவியில் பத்தாண்டுக் கால பணி முடித்தமைக்கு 18.08.1994 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை அனுமதிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர் திருமதி. மனோன்மணி ஜோஸ்பின், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம் – 6 அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் இருபதாண்டு கால பணியை முடித்துள்ளமைக்கு மருத்துவ அலுவலர் பதவியில் சிறப்பு நிலை அனுமதிக்கப்பட வேண்டும். இவர் 20 ஆண்டு கால பணி முடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமனமான நாள் | தகுதிகாண் பருவம் பூர்த்தியான நாள் | சம்பளமில்லா விடுப்பு துய்த்த விவரம் |
|---|---|---|---|---|
| 01 | மருத்துவர் திருமதி. மனோன்மணி ஜோஸ்பின் | 18.08.1984 | 19.08.1986 | ஏதும் இல்லை |

| 10 ஆண்டு கால பணி முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தண்டனை முடிவுற்றதா | தேர்வு நிலை வழங்கப்பட்ட நாள் | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 17.08.1994 | ஏதும் இல்லை | ---- | 18.08.1994 | 18.08.2004 |

கணக்கு அலுவலர்/மண்டலம்–6 அவர்களின் 05.06.2007 நாளிட்ட குறிப்புரையில் மருத்துவர் திருமதி. மனோன்மணி ஜோஸ்பின், மருத்துவ அலுவலர் அவர்களுக்கு 18.08.2004 முதல் சிறப்பு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10,000–325–15200இல் 18.08.2004 முதல் ரூ.11,950+175 தனி ஊதியமாக மாதம் நிர்ணயம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு சிறப்பு நிலை அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்.03.09.1982ன் படி அதிகாரம் பெற்றுள்ளது.

மருத்துவர் திருமதி. மனோன்மணி ஜோஸ்பின், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 அவர்கள் இருபதாண்டு பணிக்காலத்தில் ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை. மேலும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லையென்றும், தண்டனை ஏதும் நிலுவையில் இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. அன்னாருக்கு சிறப்பு நிலை காலமுறை ஊதியம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, மருத்துவர், திருமதி. மனோன்மணி ஜோஸ்பின், மருத்துவ அலுவலர் (பணியிடம் : முத்தையா தெரு மருந்தகம்) சுகாதாரத்துறை, மண்டலம்–6 அவர்களுக்கு 18.08.2004 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் சிறப்பு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000–325–15200இல் 18.08.2004 முதல் ரூ.11,950+175 தனி ஊதியமாக நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமான பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.6.ந.க.எண்.சுது/எச்1/0636 /2007

ஆணையாளர் அவர்களின் 13.12.2007 நாளிட்ட குறிப்பு

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.702/2007 பொருள் எண்.79

**பணியமைப்பு – சிறப்பு நிலை ஊதியம் வழங்க அனுமதி**

மருத்துவர் திரு. கே. சேகர் என்பவர் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.அ4/32529/79, நாள்:19.06.1979 ன்படி மருத்துவ அலுவலராக 26.06.1979 முதல் சென்னை மாநகராட்சிப் பணியில் சேர்ந்தார்.

இதன் தொடர்பாக சமர்ப்பிக்கப்படுவது என்னவெனில், அன்னாரது பணி அரசாணை எண்.1894, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள்:13.10.1981 ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி5/2638/84, நாள்:14.07.1984 ன்படி அன்னாரது பணி 27.06.1979 முதல் வரன்முறைப்படுத்தப்பட்டும், 27.06.1981 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அங்கீகரிக்கப்பட்டும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மருத்துவர் திரு. கே. சேகர், மருத்துவ அலுவலர் பதவியில் பத்தாண்டுக் கால பணி முடித்தமைக்கு 27.06.1989 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை அனுமதிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர் திரு. கே. சேகர், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 அவர்கள் தற்போது பணிமாற்று அடிப்படையில் மண்டலம்–10, திருவான்மியூர் மருந்தகத்தில் மருத்துவ அலுவலராக பணி செய்து வருகிறார்.

மருத்துவர் திரு. கே. சேகர், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் இருபதாண்டு கால பணியை முடித்துள்ளமைக்கு மருத்துவ அலுவலர் பதவியில் சிறப்பு நிலை அனுமதிக்கப்பட வேண்டும். இவர் 20 ஆண்டு கால பணி முடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமனமான நாள் | தகுதிகாண் பருவம் பூர்த்தியான நாள் | சம்பளமில்லா விடுப்பு துய்த்த விவரம் |
|---|---|---|---|---|
| 01. | மருத்துவர் திரு. கே. சேகர் | 26.06.1979 | 27.06.1981 | ஏதும் இல்லை |

| 10 ஆண்டுகால பணி முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தண்டனை முடிவுற்றதா | தேர்வு நிலை வழங்கப்பட்ட நாள் | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 26.06.1989 | ஏதும் இல்லை | -- | 27.06.1989 | 27.06.1999 |

கணக்கு அலுவலர்/மண்டலம்–6 அவர்களின் 05.06.2007 நாளிட்ட குறிப்புரையில், மருத்துவர் திரு. கே. சேகர், மருத்துவ அலுவலர் அவர்களுக்கு 27.06.1999 முதல் சிறப்பு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000 – 325 – 15200 இல் 27.06.1999 முதல் ரூ.10,975 + 50 தனி ஊதியமாக நிர்ணயம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

மருத்துவர் திரு. கே. சேகர், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 அவர்கள் இருபதாண்டு பணிக்காலத்தில் ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை. மேலும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லையென்றும், தண்டனை ஏதும் நிலுவையில் இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. அன்னாருக்கு சிறப்பு நிலை காலமுறை ஊதியம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு சிறப்பு நிலை அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் : 03.09.1982ன் படி அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, மருத்துவர் திரு. கே. சேகர், மருத்துவ அலுவலர் (பணியிடம் :திருவான்மியூர் மருந்தகம்) சுகாதாரத்துறை, மண்டலம்–6 அவர்களுக்கு 27.06.1999 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் சிறப்பு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000 – 325 – 15200 இல் 27.06.1999 முதல் ரூ.10,975 + 50 தனி ஊதியமாக நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக் குழு மூலமாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்.5/2557/2007</u>
<u>ஆணையாளர் அவர்களின் 06.12.2007 நாளிட்ட குறிப்பு</u>

## 29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.703/2007 பொருள் எண்.80

### பணியமைப்பு – தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்

திருமதி.கே. சுப்பம்மா, மகப்பேறு உதவியாளர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்கள் சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் மகப்பேறு குழந்தை நலம் மற்றும் குடும்ப நல பிரிவில் மகப்பேறு உதவியாளராக 24.01.79ல் பணியமர்த்தப்பட்டுள்ளார். குறிப்பாணை என்.HD/CWS.No.F2/9301/78, நாள்.19.01.79. இவர் 30.06.2010 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற உள்ளார். அன்னாரின் தாய்மொழி தெலுங்கு என்பதால், தனியர் பணியிலிருக்கும் காலத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்பதை காரணம் காட்டி தனியருக்கு 01.01.2005லிருந்து வருடாந்திர ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டுள்ளது.

தனியர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் 5 முறை எழுதியும் தேர்ச்சி பெறவில்லை. இவர் தமிழ் தேர்வு எழுதி தேர்ச்சி பெறவில்லை என்று தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் சார் செயலர் அவர்களால் கடித எண்.2133/DTD-D1/04, நாள்.03.04.2007ன் படி கடிதம் பெறப்பட்டுள்ளது. எனவே, தமிழ் தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்காணை அரசுக்கு முன்மொழிவு அனுப்பி பெறலாம்.

திருமதி. கே. சுப்பம்மா, அவர்கள் சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து 28 ஆண்டுகள் எந்தவித குற்றச்சாட்டுகளும் நிலுவையில் இல்லாமல் பணிபுரிந்து வருகிறார். தற்போது இவருடைய வயது 55, எனவே, தமிழ்மொழியில் தேர்ச்சி பெறாமைக்கு சிறப்பினமாக கொண்டு தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெறுவது அவசியமாகிறது.

எனவே, திருமதி. கே. சுப்பம்மா, மகப்பேறு உதவியாளர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களை தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க மாமன்றத்தின் ஒப்புதல் நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஈ3/31350/02
ஆணையாளர் அவர்களின் 20.11.2007 நாளிட்ட குறிப்பு

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.704/2007 பொருள் எண்.81

**தற்காலிக பணியிடங்கள் நீட்டிப்பு**

சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் அரசு ஆணை (பல்வகை) எண்.646, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்துறை, நாள்.16.09.1977ன்படி தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட கீழ்கண்ட 11 தற்காலிக பணியிடங்களை ஒவ்வொரு ஆண்டும் அனுமதி பெற்று நீட்டிப்பு செய்யப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | விழிப்புப் பணி அலுவலர் (காவல் துறை துணை கண்காணிப்பாளர் தகுதியில்) | 01 |
| 2. | விழிப்புப் பணி ஆய்வாளர் (காவல் துறை ஆய்வாளர் தகுதியில்) | 02 |
| 3. | கண்காணிப்பாளர் (அலுவலகம்) | 01 |
| 4. | உதவியாளர் | 01 |
| 5. | இளநிலை உதவியாளர் | 01 |
| 6. | சுருக்கெழுத்தர் | 01 |
| 7. | தட்டச்சர் | 01 |
| 8. | அலுவலக உதவியாளர் | 03 |
| | | 11 |

மன்றத் தீர்மான எண்.502/2000, நாள்.24.08.2000ல் நிறைவேற்றப்பட்டுள்ளபடி, சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் கீழ்கண்ட ஊதிய விகிதங்கள் கொண்டுள்ள எட்டு (8) தற்காலிக பணியிடங்களை மட்டும் 01.10.1998 முதல் 30.09.2001 வரையில் நீட்டிப்பு செய்து அரசாணை (வா) எண்.204 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை, நாள்.12.02.2001ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 01 | விழிப்பு பணி அலுவலர் (காவல் துறை துணை கண்காணிப்பாளர் தகுதியில்) | 01 | ரூ.8000–275–13500 மற்றும் இதர படிகள் |
| 02 | விழிப்புப்பணி ஆய்வாளர் (காவல் துறை ஆய்வாளர் தகுதியில்) | 01 | ரூ.6500–200–10500 மற்றும் இதர படிகள் |
| 03 | கண்காணிப்பாளர் (அலுவலகம்) | 01 | ரூ.5900–200–9900 மற்றும் இதர படிகள் |
| 04 | உதவியாளர் | 01 | ரூ.4000–100–6000 மற்றும் இதர படிகள் |
| 05 | இளநிலை உதவியாளர் | 01 | ரூ.3200–85–4900 மற்றும் இதர படிகள் |
| 06 | தட்டச்சர் | 01 | ரூ.3200–85–4900 மற்றும் இதர படிகள் |
| 07 | அலுவலக உதவியாளர் | 02 | ரூ.2500–55–2660 மற்றும் இதர படிகள் |
| | மொத்தம் | 08 | |

கடைசியாக இப்பணியிடங்களை அரசாணை (ப)எண்.169 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3)துறை, நாள்.18.05.06ல் அரசு 01.10.05 முதல் 30.09.06 வரை மேலும் ஓராண்டிற்க்கு தொடர் நீட்டிப்பு செய்து அரசு அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளது. 01.10.06 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்ய, மன்றத்தின் அனுமதி தீர்மான எண்.458/06 நாள்.30.11.06ல் பெறப்பட்டு, அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி அரசாணை எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கூறப்பட்ட எட்டு தற்காலிக பணியிடங்களை 01.10.07 முதல் மேலும், ஓராண்டிற்க்கு நீட்டிக்க அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ3/30984/1997**

**ஆணையாளர் அவர்களின் 20.11.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.705/2007 பொருள் எண்.82

**தற்காலிக பணியிடங்கள் நீட்டிப்பு**

சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகளிலும் தற்காலிகமாக தோற்றுவிக்கப்ப்ட்டு 30.09.2003 வரை நீட்டிக்கப்பட்ட 1739 தற்காலிக பணியிடங்களை அரசாணை (ப) எண்.202, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை, நாள்.14.06.2006ன்படி, 01.10.2003 முதல் 30.09.2005வரை நீட்டிப்பு செய்ததற்கு பின்னேற்பும், 01.10.2005 முதுல் 30.09.2006 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு வழங்கியும் அனுமதித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

சட்டமன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல், அடையாள அட்டை வழங்கும் பணிகள் போன்ற அத்தியாவசிய களப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், தொழில்நுட்பக்குழு கூட்டத்தினைக் கூட்ட கால அவகாசம் தேவைப்படுவதாலும், 01.10.06 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் பின்னேற்பானை தீர்மான எண்.457/06, நாள்.30.11.06ல் பெறப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசாணை எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் தொழில் நுட்ப குழுவைக் கூட்ட ஏதுவாக அனைத்து துறைத்தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்களின் கூட்டம் உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் தலைமையில் ஆய்வுக்கூட்டம் 31.10.07 அன்று கூட்டப்பட்டது. அச்சமயத்தில், சென்னை நகரில் கடுமையான மழை மற்றும் தெருக்களில் வெள்ளம் தேங்கியதால் உடனடி களப்பணிகள் நடைபெற வேண்டியிருந்ததால் அக்கூட்டத்தைனை தள்ளிவைக்கும் நிலை ஏற்பட்டதாலும் மற்றும் சென்னை மாநகரில்சில மண்டலங்களில் குப்பைகளை அகற்றும் பணி 24 மணி நேரமும் தீவிரமாக தொடர்ந்து நடைபெற்றதாலும் சம்மந்தப்பட்ட துறை / மண்டலங்களிலிருந்து உரிய முழுமையான விவரம் கிடைக்கப்பெறவில்லை. தற்போது சம்மந்தப்பட்ட துறை / மண்டலங்களிலிருந்து உரிய விவரம் பெறவும் மற்றும் தொழில்நுட்ப குழு கூட்டத்தினைக் கூட்டவும் கால அவகாசம் தேவைப்படுகிறது.

எனவே, மேற்கண்ட சூழ்நிலையில் 30.09.06 வரைஅரசினால் நீட்டிக்கப்பட்ட 1739 தற்காலிக பணியிடங்களை 01.10.07 முதல் மேலும், ஓராண்டிற்க்கு நீட்டிக்க அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.ஈ3/52271/1991</u>
<u>ஆணையாளர் அவர்களின் 10.12.2007 நாளிட்ட குறிப்பு</u>

## <u>29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.706/2007 பொருள் எண்.83

### <u>பணியமைப்பு – தற்காலிக பணி நீட்டிப்பு அனுமதி</u>

சென்னை மாநகராட்சியில் அரசாணை (பல்வகை) என்.328 ந.நி.(ம).கு.வ.துறை, நாள்.04.12.1991ன் படி தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட தொடர் நீட்டிப்பு செய்யப்பட்டு வரும் ஐந்து துணை ஆணையர் பதவிகள் மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியாளர் பதவிகள் ஒவ்வொரு ஆண்டும் அரசின் அனுமதி பெற்று நீட்டிக்கப்பட்டு வந்தது.

அரசாணை (பல்வகை) எண்.83, ந.நி.(ம).கு.வ.துறை. நாள்.06.04.1993ன் படி, சென்னை மாநகராட்சியில் ஒரு துணை ஆணையர் (போக்குவரத்து) பதவியும், அதனைச் சார்ந்த துணைப் பணியாளர் பதவிகளும் கலைக்கப்பட்டன மற்ற 4 துணை ஆணையர் பதவிகள் மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியாளர்கள் பதவிகளான 4 சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளும் அரசின் கடைசி நீட்டிப்பு 11.04.07. நாளிட்ட அரசாணை (பல்வகை) எண்.155, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3.) துறையின் படி, 01.01.07 முதல் 31.12.07 வரையில் பணி நீட்டிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

எனவே, இந்நிலையில், இந்திய ஆட்சிப் பணிக்கான ஊதிய விகிதம் மற்றும் இதர படிகள் கொண்டுள்ள 4 துணை ஆணையர் பதவிகளும் மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியாளர்களான 4 சுருக்கெழுத்து தட்டச்சர் (ஊதிய விகிதம் ரூ.5,000–150–8,000 மற்றும் இதர படிகள்) பதவிகளையும் 01.01.08. முதல் மேலும் ஓர் ஆண்டிற்கு நீட்டிப்பு செய்ய அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.து.ந.க.எண்.இ1/1164/2007**
**ஆணையாளர் அவர்களின் 20.11.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.707/2007 பொருள் எண்.84

**பணியமைப்பு**

திரு.பி.ஸ்ரீஹரி, அவர்கள் கருணை அடிப்படையில், பதிவுரு எழுத்தராக பணியமர்வு செய்யப்பட்டு சென்னை மாநகராட்சி, மத்திய கணக்கு குழுமத்தில் 05.07.2000 அன்று முற்பகல் பணியில் சேர்ந்தார். அவரது பணி நியமன ஆணையில் தனியரது தாய்மொழி தெலுங்கு என்பதால், இவர் நியமனம் பெற்ற ஓராண்டிற்குள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது.

திரு.பி.ஸ்ரீஹரி, பதிவுரு எழுத்தர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் 23.12.04 அன்று நடத்திய தமிழ்மொழி எழுத்துத் தேர்விலும், அதன் தொடர்ச்சியாக 08.03.2005 அன்று நடைபெற்ற வாய்மொழி தேர்விலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

தனியர் பதவியேற்ற நாளிலிருந்து தேர்ச்சி பெற்றதற்கான நாள் வரை ஊதிய உயர்வு அனுமதித்தல், மற்றும் பணிவரன்முறை செய்வது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் கருத்துரை வேண்டியதில் தணிக்கைத் துறையின் 26.12.2005 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.பி.ஸ்ரீஹரி, பதிவுரு எழுத்தர், 05.07.2000 அன்று பணியில் சேர்ந்துள்ளார். பணிநியமன உத்தரவில் குறிப்பிட்ட நிபந்தனையின்படி ஓராண்டிற்குள் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெறாமல் 08.03.2005 அன்று அதாவது நான்காண்டுகள் கழித்தே தேர்ச்சி பெற்றுள்ளதால் அன்னாருக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகாண் பருவம் நியமன ஆணைப்படி ஓராண்டு எனக் கொண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி 23(A)ன்படி அன்னார் தேர்ச்சி பெற்ற நாளிலிருந்து ஊதிய உயர்வு மற்றும் பணிவரன் முறை செய்யக் கருதலாம் என்றும், மேலும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதி 12 A (b)ல் குறிப்பிட்ட விதிகளையும் கருத்தில் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மத்திய கணக்கு குழுமம் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்ட 29.11.2000 நாளிட்ட செயற்குறிப்பு 1. திரு.பி.ஸ்ரீஹரி, பதிவுரு எழுத்தர், மத்திய கணக்குக் குழுமம் (தற்போது மன்றத்துறை) அவர்களுக்கு தனியர் பணி நியமனம் செய்யப்பட்ட 05.07.2000.லிருந்து முதல் ஆண்டு ஊதிய உயர்வு மட்டும் 01.07.2001 அன்று அனுமதித்து பணப்பயன் தகுதிகாண் பருவம் நிறைவு செய்த பின்னர் வழங்கவும் மற்றும்

2. தனியர் 05.07.2000 அன்று பணியேற்ற தேதியிலிருந்து நான்கு ஆண்டுகள் முடிந்த பின்னர் 08.03.2005.ல் தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்றமையால் பணியில் சேர்ந்த 05.07.2000 முதல் பணிவரன்முறைபடுத்தவும் 09.03.2005லிருந்து தகுதிகாண் பருவம் நிறைவு செய்தவராக அறிவிக்கப்படுவதற்கும், மற்றும் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கவும் சிறப்பினமாக கருதி அரசின் ஆணை வேண்டி எழுதப்பட்டது.

11.05.2007 நாளிட்ட அரசு கடிதத்தில் இதுகுறித்து மன்றத் தீர்மானம் பெற்று அதன்பின்னர் உரிய செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து தெரிவிப்பது என்னவெனில் தமிழ்நாடு சார்நிலைப் பணிவிதி 23(A)ன்படி தகுதிகாண் பருவத்தினர் அப்பருவ காலத்திற்குள் நிர்ணயிக்கப்பட்ட சிறப்பு தேர்வு அல்லது தகுதி தேர்ச்சி பெற வேண்டியது இருப்பின் அத்தகையவர்களுக்கு தகுதிகாண் பருவம் ஓராண்டு எனில் முதல் ஆண்டு ஊதிய உயர்வும், தகுதிகாண் பருவம் இரண்டு ஆண்டு எனில் இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வும் நிர்ணயிக்கப்பட்ட தேர்வு/தகுதியினை அடைந்த பிறகே வழங்குதல் வேண்டும்.

தமிழ்நாடு சார்நிலைப் பணி விதி 12(A) மற்றும் (b)ல் மாநில அலுவல் மொழியான தமிழில் போதிய திறன் பெற்றில்லாத எவரும் எந்த பணியிலும் நேரடி நியமனம் செய்ய தகுதி பெறவில்லை என்றும், அவ்வாறு தமிழில் போதிய திறன் இல்லாதவர் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படினும் அவர்கள் தகுதிகான் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு தேர்வானையத்தால் நடத்தப்படும் தமிழ் மொழித் தேர்வு தேர்ச்சி பெற வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அச்சிறப்பு தேர்வு/தகுதியினை அடையும்பொருட்டு அவர்களது தகுதிகான் பருவத்தினை நான்கு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம். நீட்டிக்கப்பட்ட நான்கு ஆண்டு காலததிற்குள் அத்தேர்வு / தகுதியினை அடைய தவறும் பட்சத்தில் அவர்களை பணியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். இதே விதிகளில் பிரிவு

26(b) (ii) கீழான விளக்கத்தின்படி பணியாளரின் தகுதிகாண் பருவ காலத்தினை அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் திரு. பி. ஸ்ரீஹரி, 05.07.00 அன்று பதிவுரு எழுத்தராக பணி நியமனம் செய்யப்பட்டு 08.03.05 அன்று அதாவது ஐந்து ஆண்டுகளுக்குள் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே மேற்படி விதிகளின்படி தனியருக்கு தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெற்ற 8.03.05க்கு அடுத்த நாளான 09.03.05ல் முதல் ஆண்டு ஊதிய உயர்வு அளித்து அன்றைய தேதியிலிருந்து பணி வரன்முறைப்படுத்தி தகுதி காண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டும். மேலும் இது குறித்து பெறப்பட்ட குறிப்புரையில் தனியரது பணியினை 09.03.05 முதல் வரன்முறைப்படுத்தி, முதல் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கி தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, திரு.ஸ்ரீஹரி, பதிவுரு எழுத்தர், மன்றத்துறை (முன்பு மத்திய கணக்குக் குழுமம்) அவர்களின் தகுதிகாண் பருவ காலத்தினை 05.07.2000 முதல் 08.03.2005 வரை நீட்டித்தும், முதல் ஆண்டு ஊதிய உயர்வினை 09.03.2005ல் அனுமதித்து, அந்நாள் முதல் அவரது பணியினை வரன்முறைப்படுத்தி, விதிகளின்படி 09.03.2005 முதல் மூன்றாண்டுகளுக்குள் இரண்டு வருட தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க ஆணை வேண்டி அரசுக்கு எழுத நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி2/ 8016 / 2006

ஆணையாளர் அவர்களின் 12.12.2007 நாளிட்ட குறிப்பு

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.708/2007 பொருள் எண்.85

**பணியமைப்பு**

இவ்வலுவலக கடிதம் சு.து.ந.க.எண்.சி2/8016/02 நாள்.20.04.06ல் கண்ட கடிதம் அரசுக்கு அனுப்பப்பட்டதில் 89 நாட்கள் அடிப்படையில் தினக்கூலி பணியாளராக திருமதி. மங்கலட்சுமி, ஆயா, திருமதி. கோமளா, பெருக்குநர் ஆகிய இருவரும் 22.10.96ல் ஈ.வெ.ரா. சாலையில் புதியதாக திறக்கப்பட்ட பகுப்பாய்வு கூடத்தில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு இப்பணியாளர்கள் 89 நாட்கள் பணிமுடிந்தவுடன் ஒரிரு நாட்களுக்கு பணி முறிவு செய்யப்பட்டு மீண்டும் பணியமர்த்தப்பட்டு வந்தனர். இந்நிலையில் பகுப்பாய்வு கூடம் மூடப்பட்டவுடன் இவர்களை மாவட்ட குடும்ப நலத்துறையில் 24 மணி நேர பெருமாள்பேட்டை மருத்துவமனையில் தற்காலிகமாக 07.11.03 முதல் 30.01.04 வரை பணியமர்த்தப்பட்டனர். பின்னர் மாவட்ட குடும்ப நலத்துறையில் அவர்களின் பணி தேவைப்படாது என தெரிவித்ததின் அடிப்படையில் இவர்கள் உடன் முடிவடைவதால் இவர்களை பணி நிறுத்தம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில், அரசாணை நிலை எண்.125, ந.நி.ம.கு.வ.துறை. நாள்.27.05.99ன் படி துப்புரவு, வாகனம் ஒட்டுநர், தெரு விளக்கு பராமரிப்பு குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகள் தவிர பிற பணிகளை கவனிக்க நியமிக்கப்பட்ட தினக்கூலி பணியாளர்களின் பெயர், எண்ணிக்கை, தினக்கூலி பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்ட நாள், கல்வித் தகுதி, வேலைவாய்ப்பகம் மூலம் நியமனம் செய்யப்பட்டிருப்பின் அது பற்றிய விவரங்கள் ஆகியவை கொண்ட அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும் எனவும் சென்னை மாநகராட்சியில் 04.05.99க்கு முன்பிருந்தும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிபவர்கள் மட்டுமே மேற்படி பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என அரசாணை வெளியிடப்பட்டது.

இந்நிலையில் தற்காலிக பணியாளர்கள் மலேரியா தொழிலாளர்களுடன் சேர்ந்து வழக்கு தொடுத்துள்ளதின் பேரில் நிலை வழக்குறைஞர் திரு. இரவிச்சந்திரன் அவர்களின் 23.03.06 மற்றும் 27.03.06 நாளிட்ட கடிதத்தில் இந்த இரு தற்காலிக பணியாளர்களின் பிரேரணையை அரசுக்கு அனுப்புமாறு உயர்நீதி மன்றம் உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் இவ்விருவரது பெயர்களை அரசுக்கு பரிந்துரை செய்யுமாறு உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ளதால் சென்னை மாநகராட்சி நிலை வழக்குறைஞர் அறிக்கை அளித்துள்ளதன் அடிப்படையில் எதிர் காலத்தில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் இவர்களை பணியமர்வு செய்ய அரசின் ஆணை பெற்றுத்தர கேட்டுக் கொள்ளப்பட்டது.

அரசு கடித எண்.15370/மா.ந.3/2007–1 ந.நி.ம.கு.வ.து. நாள்.07.06.07ல் திருமதி. மு.மங்கலட்சுமி, திருமதி.டி. கோமளா, தினக்கூலி பணியாளர்கள் நிரந்தரம் செய்வது குறித்து மாமன்றத் தீர்மானம் பெறப்படாததால் பெற்று அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட இரு தினக்கூலி பணியாளர்களை நீதி மன்ற உத்தரவிற்கு இணங்க எதிர்காலத்தில் ஏற்படும் காலிப்பணியிடங்களில் காலமுறை ஊதியத்தில் பணி நியமனம் செய்து பணி வரன்முறைப்படுத்த அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஈ1/19239/2006

ஆணையாளர் அவர்களின் 14.11.2007 நாளிட்ட குறிப்பு

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.709/2007 பொருள் எண்.86

**பணியமைப்பு – கோட்ட மின் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்தல்**

சென்னை மாநகராட்சி, கோட்ட மின் பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் அங்கீகரிக்கும் அதிகாரம் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணியமர்வு வழங்கும் அதிகாரம் மன்றத்திற்கு உள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியாகும்.

01.04.2006ஐ மைய நாளாகக்கொண்டு கடந்த ஆண்டு (2006–2007) மேற்படி பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டபோது, உதவி கோட்ட மின்பொறியாளர் திரு.கு.நாகநாதன் என்பவர் மீது மண்டலம்–3ல் சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காமல் பணி மேற்கொண்டதால் தொழிலாளி ஒருவர் காலமானதைத் தொடர்ந்து கடுங்குற்றச்சாட்டின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்ததால், தனியரது பெயர் கோட்ட மின் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டு, சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.396/2006, நாள்.31.08.2006ல் கீழ்குறிப்பிட்ட மூன்று பெயர்களைக் கொண்ட பட்டியலை 2006–07ம் ஆண்டுக்கான கோட்ட மின்பொறியாளர் பதவிக்கான தேர்ந்த பெயர்ப்பட்டியலாக நிலுவையிலுள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்புக்குட்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

1) திரு.கே.பி.அருணகிரி, உதவி கோட்ட மின் பொறியாளர்,
2) திரு.வி.குப்பன், உதவி கோட்ட மின்பொறியாளர்,
3) திரு.பி.எம்.சுந்தரம், உதவி கோட்ட மின்பொறியாளர்,

இதனைத் தொடர்ந்து தெரிவுப்பட்டியலில் உள்ள கே.பி.அருணகிரி என்பவருக்கு 24.01.2007 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி கோட்ட மின்பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. உதவி மின்கோட்ட பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் (Panel) தயாரிப்பது தொடர்பாக பட்டயப் பொறியாளர்களால் தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டு மனு எண்.255/2005ல் சாதகமாக பெறப்பட்ட தீர்ப்பினைத் தொடர்ந்து, தெரிவுப்பட்டியலில் அடுத்திருந்த திரு.வி.குப்பன், மற்றும் திரு.பி.எம்.சுந்தரம் ஆகியோருக்கு 15.10.2007 நாளிட்ட செயல்முறை ஆணையின் வாயிலாக கோட்ட மின் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இவ்வாறிருக்க, ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்த காரணத்தினால் மேற்படி, தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்ட திரு.கு.நாகநாதன் என்பவர், தன்மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், தன்னை எச்சரித்து (Warned) ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டுவிட்டதால், மேற்படி தெரிவுப்பட்டியலில் தனது பெயரினை உரிய இடத்தில் பொருத்தி தனக்கு பதவி உயர்வு வழங்கிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மண்டலம்–3, வார்டு எண்.48, கல்யாணபுரம் குடிசைப்பகுதியில் துருப்பிடித்த தெருவிளக்கு மின் கம்பத்தை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டபோது, தொழிலாளி ஒருவர் உயிர் இழந்ததால், தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1970, பிரிவு எண்.10(பி)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், பழுதடைந்துள்ள மின்விளக்கு கம்பங்களை அகற்றும் நிகழ்வுகளில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளையும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்ட பின்னரே தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற தெரிவித்து தனியரை எச்சரித்து (Warned) விடப்பட்டது.

தனியரின் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை நிகழ்வில் தனியரை எச்சரித்து ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதால், தனியரது பெயரினை 01.04.2006ஐ மைய நாளாகக் கொண்ட கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு 2006–07ஆம் ஆண்டுக்கான தெரிவுப்பட்டியலில் பணியில் இளையவரான திரு.கே.பி.அருணகிரி என்பவருக்கு முன்பு சேர்க்கலாம்.

பொ.து.ந.க.எண்.ஈ1/19239/2006

1) எனவே, 01.04.2006ஐ மையநாளாகக் கொண்ட 2006-2007ஆம் ஆண்டுக்கான கோட்ட மின் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலை பின்வருமாறு மாற்றியமைக்கவும்,

1) திரு. கு.நாகநாதன், உதவி கோட்ட மின் பொறியாளர்
2) திரு.கே.பி.அருணகிரி, உதவி கோட்ட மின்பொறியாளர்
3) திரு.வி.குப்பன், உதவிகோட்ட மின் பொறியாளர்
4) திரு.பி.எம். சுந்தரம், உதவி கோட்ட மின்பொறியாளர்

2) கோட்ட மின்பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தில் உதவி கோட்ட மின்பொறியாளர் திரு.கு.நாகநாதன், என்பவருக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.10000-325-15200 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக கோட்ட மின் பொறியாளராக பதவி உயர்வு அளித்து பணியமர்வு வழங்கவும்,

3) இவருக்கு பணியில் இளையவரான திரு.கே.பி.அருணகிரி என்பவர் கோட்ட மின்பொறியாளராக பணியேற்ற நாளான 24.01.2007 பிற்பகலிருந்து இவருக்கு பணி உறுதியாக்கம் செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

## 29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.710/2007 பொருள் எண்.87

### உதவி கால்நடை மருத்துவர் பணி நியமனம்

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் 1998ன்படி உதவி கால்நடை மருத்துவர் பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் 6500–250–11,100.

கல்வித் தகுதி:– B.V.Sc degree or any equivalent degree of university or Institution or A post Graduate degree or Diploma in Animal Husbandry or Veterinary Science or any equivalent degree or diploma of any university or Institution. 35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை கால்நடை பிரிவில் இரண்டு உதவி கால்நடை மருத்துவர் பணியிடங்களில் அரசாணை (ப.எண்)57 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.02.2007ன்படி 50 சதவிகித அதாவது 2006 – 2007ம் ஆண்டுக்கு ஒரு பணியிடத்தை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து நபர் பட்டியல் பெறப்பட்டு நிரப்பப்பட்டது.

மீதமுள்ள 50 சதவிகித அதாவது ஒரு உதவி கால்நடை மருத்துவர் பணியிடத்தை 2007–2008ம் ஆண்டில் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நபர் பட்டியல் பெறப்பட்டு 15.10.2007 அன்று சான்றிதழ் சரிபார்க்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| Sl. No | Registration No | Name & Address | Date of Birth | Qualification | Communal Rotation |
|---|---|---|---|---|---|
| 1 | 1991 M 10510 SF 20.08.1991 | V.Kannadhasan S/o V.Velu B.30 Pattinapakkam Chennai-28 | 19.05.67 | Gr.Veterinery Science (veterinay Science) | S.C Non - Priority |

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் உதவி கால்நடை மருத்துவர் பதவி வகுப்பு–2ல் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், இப்பதவியினை சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 85(3)(b)ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் நியமனம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது.

சுகாதார துறையில் காலியாக உள்ள ஒரு உதவி கால்நடை மருத்துவர் பணியிடத்தை மேற்படி நபரைக் கொண்டு நிரப்பலாம். பொதுவிதி 12 (d) (ii)ன் படியும், அரசாணை எண்.98 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.17.07.2006ல் அரசு பணியாளர்களுக்கான வயது வரம்பினை கடந்தவர்களுக்கு மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு வயது தளர்வாணை வழங்கியுள்ளதால் மேற்படி நபருக்கு வயது தளர்வாணை பொருந்தாது.

எனவே, அரசாணை எண்.65 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (N2)துறை நாள்.30.03.2007ன்படி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து 1 : 1 என்ற விகிதாசாரத்தில் பெறப்பட்ட நபர் பட்டியலின்படி சுகாதார துறையில் காலியாக உள்ள ஒரு உதவி கால்நடை மருத்துவர் பணியிடத்தை Dr.V.கண்ணதாசன் என்பவரை உதவி கால்நடை மருத்துவராக ரூ.6500–250–11,100/– என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக பணிநியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/1792/07
ஆணையாளர் அவர்களின் 13.12.2007 நாளிட்ட குறிப்பு

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.711/2007 பொருள் எண்.88

**பணியமைப்பு – மண்டல அலுவலர் பதவி உயர்வு**

அரசாணை எண்.79 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை 9.3.2001ல் சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் 10 மண்டல அலுவலர் பதவியை தொடர்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி பதவியில் 2007–08 ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள /ஏற்படவுள்ள காலி பணியிடங்களை வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி பதவி உயர்வு மூலம் நிரப்ப 1.4.07ஐ மையநாளாகக்கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2005 ஆம் ஆண்டில் மண்டல அலுவலர் பதவி காலிப்பணியிடம் ஏற்படாததால் அவ்வாண்டிற்கு தெரிவு பட்டியல் தயாரிக்கப்படவில்லை. மேலும் நிர்வாக காரணங்களினால் 2006 ஆம் ஆண்டிற்கான மண்டல அலுவலருக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படவில்லை.

அரசாணை எண்,161 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.8.98–ன்படி மண்டல அலுவலர் பதவிக்கான தகுதிகள் மற்றும் நியமன முறை பின்வருமாறு.

| பதவியின் பெயர் | நியமன முறை | தகுதி |
|---|---|---|
| மண்டல அலுவலர் | குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரிவர்களை பதவி உயர்வின் மூலம் | (அ) குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாது பணியாற்றி இருப்பவர்கள்<br>(ஆ) தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் செயல் அலுவலருக்கான கணக்குத்தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்புத் தேர்வில் தேர்ச்சி |

மேற்படி பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்படுள்ளதால், சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 பிரிவு 85 (3) (பி)–ன் படி மாவட்ட குடும்ப நலத்துறையில் உள்ள மண்டல அலுவலர் பதவியினை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் பணி நியமனம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது.

இதற்கு முன்பு 2004 ஆம் ஆண்டில் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு கடைசியாக டாக்டர் திருமதி.பானுமதி ஈஸ்வரன் என்பவருக்கு பணி மூப்பின்படி மண்டல அலுவலராக பதவி உயர்வு 16.12.2004 அன்று வழங்கப்பட்டது.

வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி மண்டல அலுவலர் பதவியினை பதவி உயர்வு மூலம் நிரப்ப ஊட்டப்பதவியில் உள்ள பின்வரும் மருத்துவ அலுவலர்கள் பெயர்கள் பணி மூப்பின்படி பரிசீலிக்கப்பட்டது.

| எண். | மருத்துவரின் பெயர்<br>செல்வி/ திருமதி. | குறிப்பு |
|---|---|---|
| 01 | டாக்டர் வி.சீதா | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார். |
| 02 | டாக்டர் எ.கலைச்செல்வி | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார். |

<u>மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/1792/07</u>

| | | |
|---|---|---|
| 03 | டாக்டர் சசிக்கலைகுமாரி | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார். |
| 04 | டாக்டர் கே. புஷ்பா | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படிமுழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் பரிசீலிக்கலாம். |
| 05 | டாக்டர் சம்சுனிசா | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படிமுழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் பரிசீலிக்கலாம். |
| 06 | டாக்டர் டி.புஷ்பவள்ளி தாயார் | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார். |
| 07 | டாக்டர் கே.சரோஜினி | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார். |
| 08 | டாக்டர் நிர்மலா நாகராஜன் | சென்னை மாநகராட்சி பணியில் சேரவில்லை. |
| 09 | டாக்டர் ஆர்.யுவராணி | சென்னை மாநகராட்சி பணியில் சேரவில்லை. |
| 10 | டாக்டர் பி.கிருஷ்ணம்மா | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார் |
| 11 | டாக்டர். எ.கிருபாகரி | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார் |
| 12 | டாக்டர் டி.பி.கஸ்தூரி | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார் |
| 13 | டாக்டர் எஸ்.சரஸ்வதி | மண்டல அலுவலர் பதவி உயர்வு ஏற்க விருப்பம் இல்லை என 06.06.07 அன்று கடிதம் கொடுத்துள்ளார். |
| 14 | டாக்டர் ஜி.மகேஸ்வரி | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார் |
| 15 | டாக்டர் எம்.மணிமேகலை | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படிமுழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் பரிசீலிக்கலாம். |
| 16 | டாக்டர் ஜி.மலர்விழி | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார் |
| 17 | டாக்டர் வி.சுகதேவி | 31.07.07 அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார் |
| 18 | டாக்டர் பி.சுசிலாதேவி | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார் |
| 19 | டாக்டர் கே.மனோகரி | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படிமுழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் பரிசீலிக்கலாம். |
| 20 | டாக்டர்.பி.காசியம்மாள் பெயர் மாற்றம் பி.காயத்ரி | 31.07.04 அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார் |
| 21 | டாக்டர் திருமதி.பி.காஞ்சனமாலா திருப்பூர்நகராட்சியிலிருந்து ஒருவழி பணிமாறுதலின்படி சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்தார். | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படிமுழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் பரிசீலிக்கலாம். |
| 22 | டாக்டர் திருமதி.பி.சபிதா வேலூர் நகராட்சியிலிருந்து ஒருவழி பணிமாறுதலின்படி சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்தார். | மண்டல அலுவலர் பதவி உயர்வு ஏற்க விருப்பம் இல்லை என 17.06.07 அன்று கடிதம் கொடுத்துள்ளார். |
| 23 | டாக்டர் கலைச்செல்வி | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படிமுழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் பரிசீலிக்கலாம். |
| 24 | டாக்டர் கலாதேவி | சென்னை மாநகராட்சி, பணியை பணி துறப்பு செய்து விட்டார் |
| 25 | டாக்டர் ஆர்.அல்லி | சென்னை மாநகராட்சி பணியில் சேரவில்லை. |
| 26 | டாக்டர் எம்.திலகவதி | சென்னை மாநகராட்சி பணியில் சேரவில்லை. |

<u>மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/1792/07</u>

| | | |
|---|---|---|
| 27 | டாக்டர் எஸ்.ஹேமலதா | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படிமுழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் பரிசீலிக்கலாம். |
| 28 | டாக்டர் எஸ்.மல்லிகா | சென்னை மாநகராட்சி பணியில் சேரவில்லை. |
| 29 | டாக்டர் ஆர்.அமுதா | சென்னை மாநகராட்சி பணியில் சேரவில்லை. |
| 30 | டாக்டர் கே.ரேணுகா | மண்டல அலுவலர் பதவி உயர்வு ஏற்க விருப்பம் இல்லை என 10.10.07 அன்று கடிதம் கொடுத்துள்ளார். |
| 31 | டாக்டர் டி.எம்.சுமதி | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படிமுழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் பரிசீலிக்கலாம். |

மேற்படி பட்டியலின்படி வரிசை எண்.1, 2, 3, 6, 7, 10, 11, 12, 14, 16, 18, 24, ஆகியவர்கள் சென்னை மாநகராட்சி பணியை பணித்துறப்பு செய்துள்ளதாலும், வரிசை எண்.8, 9, 25, 26, 28, 29, ஆகியவர்கள் சென்னை மாநகராட்சி பணியில் சேரவில்லை என்பதாலும், வரிசை எண்.17, 20, ஆகிய இருவர் வயது முதிர்வு காரணமாக பணி ஓய்வு பெற்றதாலும், வரிசை எண்.13, 22, 30 ஆகியோர் மண்டல அலுவலர் பதவி உயர்வு பெற விருப்பம் இல்லை என கடிதம் கொடுத்ததாலும், வரிசை எண்.4, 5, 15, 19, 21, 23, 27, 31, ஆகியோர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி முழு தகுதி பெற்றுள்ளதால் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| வ.எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள்(சென்னை மாநகராட்சியில்) |
|---|---|---|
| 01. | டாக்டர் திருமதி கே.புஷ்பா | 11.06.1979 |
| 02. | டாக்டர் திருமதி.சம்சுனிசா | 31.05.1979 பி.ப |
| 03. | டாக்டர் திருமதி எம். மணிமேகலை | 10.10.1979 |
| 04. | டாக்டர் திருமதி.கே.மனோகரி | 10.12.1979 |
| 05. | டாக்டர் திருமதி.பா. காஞ்சனமாலா | 22.12.1981 |
| 06. | டாக்டர் திருமதி பி.கலைச்செல்வி | 11.04.1984 |
| 07. | டாக்டர் திருமதி எஸ்.ஹேமலதா | 12.04.1984 |
| 08. | டாக்டர் திருமதி.டி.எம்.சுமதி | 11.04.1984 |

தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 8 நபர்கள் மீது துறை சம்பந்தமாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. இவர்களின் பணி திருப்திகரமாக உள்ளது என்று மந்தண அறிக்கை கடந்த 5 ஆண்டுகளுக்கு பெறப்பட்டுள்ளது.

1) எனவே, பின்வரும் மண்டல அலுவலருக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியும்,

| வ.எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள்(சென்னை மாநகராட்சியில்) |
|---|---|---|
| 01. | டாக்டர் திருமதி கே.புஷ்பா | 11.06.1979 |
| 02. | டாக்டர் திருமதி.சம்சுனிசா | 31.05.1979 |
| 03. | டாக்டர் திருமதி எம். மணிமேகலை | 10.10.1979 |
| 04. | டாக்டர் திருமதி.கே.மனோகரி | 10.12.1979 |
| 05. | டாக்டர் திருமதி.பா.காஞ்சனமாலா | 22.12.1981 |
| 06. | டாக்டர் திருமதி பி.கலைச்செல்வி | 11.04.1984 |
| 07. | டாக்டர் திருமதி எஸ்.ஹேமலதா | 12.04.1984 |
| 08. | டாக்டர் திருமதி.டி.எம்.சுமதி | 11.04.1984 |

2) மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்களை கொண்டு சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் காலியாக உள்ள மண்டல அலுவலர் பதவியினை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக மண்டல அலுவலர் பதவியில் ரூ.9100–275–14050 என்ற காலமுறை ஊதிய விகிதம் மற்றும் இதர படிகளுடன் பணி நியமனம் செய்யவும், மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.712/2007 பொருள் எண்.89

**பணியமைப்பு – கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு**

சென்னை மாநகராட்சியில் கீழ்குறிப்பிட்ட கண்காணிப்புப் பொறியாளர்கள் பணியிடங்கள் வகைப்படுத்தப்படாத பதவிகாளக உள்ளன. இப்பதவிகளுக்கான தெரிவுப் பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியன அரசின்வசம் உள்ளது. இப்பதவிக்கான ஊட்டப்பதவி செயற்பொறியாளர் பதவியாகும்.

1) கண்காணிப்பு பொறியாளர் (மழைநீர்வடிகால் துறை)
2) கண்காணிப்பு பொறியாளர் (பாலங்கள் துறை)
3) கண்காணிப்பு பொறியாளர் (பேருந்து சாலைகள் துறை)
4) கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மைத் துறை)
5) கண்காணிப்பு பொறியாளர் (திட்டம் மற்றும் ஆய்வு)

அரசாணை எண்.11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.01.2007ல் வழங்கப்பட்ட ஆணையினைத் தொடர்ந்து, மேற்படி பணியிடங்கள் பதவி உயர்வின் மூலமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மேற்படி கண்காணிப்பு பொறியாளர் பணியிடங்களில், திட்டம் மற்றும் ஆய்வு கண்காணிப்பு பொறியாளராக பணிபுரிந்த திரு.டி.தேவதாஸ் சந்திரசேகர் என்பவர் தன்விருப்ப ஓய்வு அளிக்கக்கோரி நியமன அதிகாரம் பெற்ற அரசுக்கு கோரிக்கை அளித்த கோரிக்கையானது அரசால் ஏற்கப்பட்டு, அரசாணை எண்.205 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.10.2007ல் தனியர் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து 31.10.2007 பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வு பெற அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் 31.10.2007 பிற்பகல் அன்று தன்விருப்ப ஓய்வு பெற்றார். இதனால் வகைப்படுத்தப்படாத கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் ஒரு காலிப்பணியிடம் ஏற்பட்டுள்ளது.

மழைநீர் வடிகால் துறையில் கண்காணிப்பு பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.கே.பாலசுந்தரம் என்பவரது பெயர் தலைமைப் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவருக்கு தலைமைப் பொறியாளர் பதவி உயர்வு வழங்கும் பட்சத்தில், மழைநீர் வடிகால் துறையில் வகைப்படுத்தப்படாத கண்காணிப்பு பொறியாளர் பதவியில் ஒரு காலிப்பணியிடம் ஏற்படக்கூடும்.

எனவே, மேற்படி வகைப்படுத்தப்படாத இரண்டு கண்காணிப்பு பொறியாளர் பதவிகளுக்கு (காலமுறை ஊதிய விகிதம் – ரூ.14300–400–18300) தெரிவுப்பட்டியல் தயாரிக்க வேண்டியுள்ளது.

கண்காணிப்பு பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்ற செயற்பொறியாளர்களுக்கு அடுத்து செயற்பொறியாளர் பதவிக்கான பணிமூப்பின் படி கீழ்கண்ட செயற்பொறியாளர்கள் உள்ளனர்.

1) திரு.பி.ஆர்.எமரோஸ், செயற்பொறியாளர், திடக்கழிவு மேலாண்மைத் துறை,
2) திரு. ஆர்.குமரேசன், செயற்பொறியாளர், பாலங்கள் துறை (ஊதியம் மண்டலம்–4)
3) திரு.எஸ்.மோகன்ராஜ், செயற்பொறியாளர், திடக்கழிவு மேலாண்மைத்துறை (ஊதியம் மண்டலம்–5)

அரசாணை எண்.223, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.06.2006ல் மேற்படி செயற்பொறியாளர்களது பணி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு விதிகளில் வகுக்கப்பட்டுள்ளபடி, மேற்படி அலுவலர்கள் ஆறு ஆண்டுகள் செயற்பொறியாளர் பதவியில் பணிபுரிந்துள்ளனர்.

இவர்களில் வரிசை எண்.1ல் உள்ள திரு.பி.ஆர்.எமரோஸ், செயற்பொறியாளர், வங்கிக் கணக்குகளை பொறுப்புள்ள அலுவலருக்கு மாறுதல் செய்யாமல், தன்னிச்சையாக விடுப்பில் இருந்து கொண்டு, காசோலைகளை பணமாக மாற்றிட கையொப்பம் இட்ட செயலுக்காக இவர் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், தண்டனையாக இவரது ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஓராண்டு காலத்திற்கு நிறுத்திவைக்க அரசாணை எண். 226, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,

நாள்.28.04.2004ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், தனியர் அடிக்கடி விடுப்பில் சென்ற காரணத்தினாலும், முக்கிய பணிகளில் ஒன்றான பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தினை 04.01.2003க்கு முன்பு ஒருமுறை கூட பார்வையிடாத அலட்சிய போக்கினாலும் இவர்மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், தனியருக்கு தனியரது ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஆறு மாத காலத்திற்கு நிறுத்திவைக்க அரசாணை எண்.293, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.10.06.2004ல் ஆணையிடப்பட்டுள்ளது.

அரசால் வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் அமல்படுத்தப்படவேண்டியிருந்த காரணத்தினால் கடந்த வருடம் கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு தயாரிக்கப்பட்ட தெரிவுப் பட்டியலில் தனியரது பெயர் சேர்க்கப்படவில்லை. பதவி உயர்வுக்கு பரிசீலிக்க தனியரது பணியினை கருத்தில்கொள்ள வேண்டிய கடந்த ஐந்து ஆண்டு காலத்திற்குள் தனியர் இரண்டு முறை தண்டனைகளை பெற்றுள்ளார். அரசால் விதிக்கப்பட்டுள்ள தண்டனைகள் தற்போது
அமல்படுத்தப்படவுள்ளது. தண்டனைகள் அமலில் இருந்தால் (Currency of Punishment) தெரிவுப்பட்டியலில் அலுவலரது பெயரினை சேர்க்க இயலாது என்பதால், தனியரது பெயரினை தெரிவுப் பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்க வேண்டியுள்ளது.

எனவே, கீழ்கண்ட இனங்களின் மீது மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

அ) பணிமூப்பின்படி வரிசை எண்.1ல் உள்ள செயற்பொறியாளர் திரு.பி.ஆர்.எமரோஸ், என்பவரின் பெயரை தவிர்த்து வகைப்படுத்தப்படாத கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு பின்வரும் செயற்பொறியாளர்களைக் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கிடவும்,

1) திரு.ஆர்.குமரேசன், செயற்பொறியாளர்,
2) திரு.எஸ்.மோகன்ராஜ், செயற்பொறியாளர்,

ஆ) உதவி செயற்பொறியாளர் பதவியில் பணிமூப்பு நிர்ணயம் செய்வது குறித்து நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றம் வழங்கவிருக்கும் தீர்ப்புக்குட்பட்டு ரூ.14300–400–18300 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக செயற்பொறியாளர் திரு.ஆர்.குமரேசன் என்பவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு அளித்து, கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தில் கண்காணிப்புப் பொறியாளராக பணியமர்வு செய்து ஆணை வழங்கிடவும் அரசினைக் கோரவும்,

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ3/19032/2006**
**ஆணையாளர் அவர்களின் 21.11.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.713/2007 பொருள் எண்.90

**பணியமைப்பு**

திரு.வி.சித்தண்ணன், விழிப்பு அலுவலர், சென்னை மாநகராட்சி அவர்கள் காவல் துறை துணை கண்காணிப்பாளர் பதவியிலிருந்து காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் என பதவி உயர்வு செய்யப்பட்டு உள்துறை (காவலர்– 1அ) காவல் குறிப்பு எண்.52 நாள்.16.11.2007ல் ஆணை வெளியிட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்காக நியமனக்குழு மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவிற்காகவும், தகவலுக்காகவும் சமர்ப்பிக்கின்றது''

''இதனை மன்றம் பதிவு செய்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்